# நமது இரண்டு குடும்பங்கள்

## மத். 12:46-50; மாற். 3:20, 21, 31-35; லூக். 8:19-21,

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*கலிலேயாவில் இயேசுவின் இரண்டாவது பயணத்தின் முடிவில் அவர் மிகவும் வேலை மும்முரமான நாளைக் கொண்டிருந்தார்.[1] அந்த நாளானது, பிசாசு பிடித்தும் பார்வையற்றும் வாய்பேச முடியாமலும் இருந்த ஒரு மனிதரைக் குணமாக்குதலுடன் தொடங்கிற்று (மத். 12:22, 23). இது கிறிஸ்துவானவர், சாத்தானின் வல்லமையைக் கொண்டே அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்ற குற்றச்சாட்டை விசையுடன் தொடங்கி வைத்தது (மத். 12:23-30). ஆதாரமற்ற அந்தக் கூற்றிற்கு இயேசு பதில் அளித்தபின்பு, அவரது விரோதிகள் "வானத்திலிருந்த ஒரு அடையாளத்தை" காண்பிக்க வேண்டும் என்று அவரை வற்புறுத்தினார்கள் (லூக். 11:16). முரண்பாடு நிறையப் பெற்ற அந்த நாளில், வித்தியாசமான ஒரு சிறு நிகழ்ச்சி நடைபெற்றது. அதைப் பற்றிய மாற்கு சுவிசேஷத்தின் விவரம் பின்வருமாறு:*

> *அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: "இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள்" என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று சொல்லி; தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து: "இதோ, என் தாயும், என் சகோதரரும் இவர்களே! தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான்" என்றார் (3:31-35).*

*நாம் இந்தப் பகுதியை வாசிக்கையில், பல கேள்விகள் சிந்தைக்கு வருகின்றன: "சுவிசேஷ எழுத்தாளர்கள் இதை நமக்குக் கூறுவதில் என்ன நோக்கம் கொண்டிருந்தார்கள்?"; "இயேசு தமது குடும்பத்தை - விசேஷமாக தமது தாயாரை - ஏன் ஒப்புக்கொள்ளாதிருந்தார்?"; "இந்த நிகழ்ச்சியில் இருந்து நாம் எந்த பாடத்தை அல்லது பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டுள்ளார்?" "நமது இரண்டு*

*குடும்பங்களை"ப் பற்றி நாம் படிக்கின்ற இவ்வேளையில் மேற்கண்ட மற்றும் பிற கேள்விகளுக்கு நாம் பதில் அளிப்போம் என்று நம்புகின்றோம்.*

## இயேசுவின் இரண்டு குடும்பங்கள்

*நாம் இயேசுவின் இரண்டு குடும்பங்களுடன் தொடங்குவோம்.*

**இயேசுவின் சரீரப் பிரகாரமான குடும்பம்**

*இயேசு ஒரு சரீரப் பிரகாரமான குடும்பத்தில் பிறந்தார் என்பதை பெரும்பான்மையானவர்கள் அறிந்திருக்கின்றோம். யோசேப்பு என்பவர் அவரது சட்டப்பூர்வமான தந்தையாக இருந்தார் (மத். 1:16; லூக். 3:23; யோவா. 1:45; 6:42), மற்றும் மரியாள் என்பவள் அவரது தாயாக இருந்தாள் (மத். 1:18; 2:11; 13:55; லூக். 2:34). கிறிஸ்து பிறந்தபோது மரியாள் ஒரு கன்னிப் பெண்ணாக இருந்தாள்; ஆனால் அவரது பிறப்பிற்குப் பின்பு, யோசேப்பும் மரியாளும் ஒரு மனிதரும் அவரது மனைவியும் என்ற வகையில் கூடி வாழ்ந்தார்கள். அவர்கள் இயேசுவின் அரைசகோதரர்களாயிருந்த நான்கு மகன்களைப் பெற்றெடுத்தார்கள்: "யாக்கோபு, யோசே, சீமோன் மற்றும் யூதா" (மத். 13:55; மாற். 6:3ஐக் காணவும்). அவர்கள் குறைந்தபட்சம் இரண்டு மகள்களையும் பெற்றார்கள் (மத். 13:56; மாற். 6:3ஐக் காணவும்). இவ்விதமாக கிறிஸ்து குறைந்தபட்சம் ஒன்பது மக்களைக் கொண்ட ஒரு குடும்பத்தில் வளர்ந்தார். ஒவ்வொரு குறிப்பின்படியாகவும் அது ஒரு மகிழ்வான இல்லமாக இருந்தது.*

*இருப்பினும், இயேசு தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்குவதற்காக இல்லத்தை விட்டுப் புறப்பட்டபோது, அவரது குடும்ப உறவுகள் மாற்றம் பெற்றன. அவரது இளைய சகோதரர்களின் பகுதியில் பொறாமையும் வெறுப்புணர்வும் இருந்திருக்கலாம். அவர்கள் அவரை மேசியா என்று ஏற்றுக்கொள்வதற்கு மனவிருப்பமற்றவர்களாக இருந்தார்கள் மற்றும் அவ்வப்போது அவரை நயப்பழிப்புரையால் தாக்கினார்கள் என்று யோவான் அறிக்கை தந்தார் (யோவா. 7:3-5).[2] கிறிஸ்து யாராய் இருந்தார் என்பது பற்றி அவரது தாயாகிய மரியாள் தெளிவான கருத்துக் கொண்டிருந்தார் (லூக். 2:19, 51ஐக் காணவும்), ஆனால் அவளும் [மரியாளும்] கூட அவரது [இயேசுவின்] ஊழியத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை (யோவா. 2:3, 4ஐக் காணவும்).*

*இது நம்மை மாற்கு 3ம் அத்தியாயத்தில் நடந்த நிகழ்வுக்குக் கொண்டு வருகிறது. பின்னணிகள் சிலவற்றை அறிவதற்காக, நாம் வசனம் 20ல் இருந்து நமது கலந்துரையாடலைத் தொடங்குவோம்:*

> *பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள். அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, "அவர் மதிமயங்கியிருக்கிறார்"[3] என்று சொல்லி, அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள் (மாற். 3:20, 21).*

"அவருடைய சொந்த இனத்தார்" என்பதற்குப் பதில், NIVயில் "அவருடைய குடும்பத்தார்" என்றுள்ளது. "அவரைப் பிடித்துக்கொள்ளும்படி" என்ற சொற்றொடரானது, இயேசு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவரை அவர்கள் தங்களுடன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல நோக்கங் கொண்டிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

இயேசு "மதிமயங்கியிருக்கிறார்" என்று அவரது நண்பர்களும் குடும்பத்தாரும் நினைத்ததற்கு, இயேசு உண்பதற்குக்கூட நேரம் எடுத்தக்கொள்ளாதிருந்தார் என்ற உண்மை மட்டும் காரணமாயிருந்திராது.[4] அவர்கள் அந்த முடிவை அடைவதற்குக் காரணமாயிருந்திருக்கக் கூடிய பல காரணிகளை வில்லியம் பார்க்ளே என்பவர் பட்டியலிட்டார்:[5]

(1) இயேசு வருமானப் பாதுகாப்பைத் தூக்கியெறிந்திருந்தார். தலை சாய்க்கவும் இடமில்லாத ஒரு நாடோடியாக அலைந்து திரிவதற்காக, உணர்வுள்ள எந்த ஒரு மனிதராவது ஒவ்வொரு வாரமும் பணம் தரக்கூடிய ஒரு தொழிலை விட்டுவிடுவாரா?

(2) இயேசு பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாயிருந்தது. தோல்வியடைந்து அழிவோம் என்ற நிலையிலும், பகுத்தறிவுள்ள எந்த ஒரு மனிதராவது யூதர்களின் முழு அமைப்புடன் யுத்தம் ஒன்றை மேற்கொள்வாரா?

(3) சமுதாயத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து இயேசு அதிகம் அதிகமாகத் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டிருந்தார். காய்ப்பேறிய கைகளைக் கொண்ட பெரும்பான்மையான மனிதர்களுடனும், ஐயத்திற்கிடமான பெயர்பெற்ற சிலருடனும் உள்ள கல்வியறிவற்ற மனிதர்களின் வித்தியாசமான கலவையான குழு ஒன்றைக் கொண்டு வெற்றியடையலாம் என்று நியாயமான அறிவுள்ள எந்த ஒரு மனிதராவது நம்பிக்கை கொள்வாரா[6]?

பார்ட்டன் காஃப்மேன் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> மாம்சப் பிரகாரமான மற்றும் மறுஜென்மம் எடுத்திராத மனிதர்களுக்கு, தேவனுடைய ஊழியத்தில் வைராக்கியம் என்பது மதிநுட்பம் வாய்ந்ததாக ஒருபோதும் இருப்பதில்லை. வியாபாரம், யுத்தம், அறிவியல், சந்தோஷம், அரசியல் அல்லது ஏறக்குறைய பூமியின் தேடுதல் எதிலும் வைராக்கியம் கொண்டிருத்தல் என்பது பாராட்டப்படுகிறது, வெகுமதியளிக்கப்படுகிறது மற்றும் முன்னேற்றமடைய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது; ஆனால் ஒரு மனிதன் பரிசுத்தமான தேவபக்தியின் ஊழியத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தால், அவனது அயலகத்தார் தலையைக் குலுக்கிக் கொண்டு, "அவன் அதிலேயே மூழ்கிப் போய்விட்டான்!" என்று கூறத் தொடங்குகின்றார்கள்.[7]

வசனம் 21ல் உள்ள இயேசுவின் "சொந்த இனத்தார்" என்பவர்கள், வசனம் 31ல் உள்ள "அவரது தாயும் சகோதரர்களும்" தான் என்பது பற்றி நாம் நிச்சயமாய் எதுவும் கூற இயலாது, ஆனால் ஒரு இயல்பான வளர்நிலை அங்குள்ளது: வசனம் 21ல் கிறிஸ்துவின் "இனத்தார்" அவரைப்

*பிடித்துக்கொண்டு போக வேண்டியது அவசியம் என்று முடிவு செய்தார்கள், எனவே அவர்கள் - அவர் இருந்த இடத்திற்கு புறப்பட்டு - "வந்தார்கள்." சற்று காலம் தாண்டிய பின்பு (வ. 22-29), "அவருடைய சகோதரரும் தாயாரும்" அவர் இருந்த இடத்திற்கு வந்தார்கள் (வ. 31). வசனம் 21லும் வசனம் 31லும் உள்ள மக்கள் ஒரே நபர்களே என்று உறுதியாகத் தோன்றுகிறது.*

*வசனம் 21க்கும் வசனம் 31க்கும் இடையில் ஏதேனும் தொடர்பு இருக்குமென்றால், மற்றும் மரியாளும் இயேசுவின் சகோதரர்களும் "அவர் எப்படியிருப்பினும்'' அவருக்கு உதவுவதற்காக வந்தார்களென்றால், பின்வரும் கேள்வி எழும்புகிறது: ''கிறிஸ்துவின் தாயார் இவ்விதமான திட்டத்திற்கு சம்மதித்துச் செல்லவேண்டியது ஏன்?" இயேசு யாராயிருந்தார் என்பது பற்றி அவருடன் பிறந்திருந்தவர்களைக் காட்டிலும் அவரது தாயார் அதிகமாய் அறிந்திருந்தாரே. அது உண்மையே, ஆனாலும் பின்வரும் இரண்டு உண்மைகளைச் சிந்தையில் வையுங்கள்: (1) இயேசு யார் என்பது பற்றி மரியாள் சற்று அறிந்திருப்பினும், அவளது [மரியாளின்] புரிந்து கொள்ளுதல் இன்னமும் முழுமை அடையாததாகவே இருந்தது; (2) அவள் இன்னும் தாயின் கவலைகளைக் கொண்ட ஒரு தாயாகவே இருந்தாள். தனது மகன் சரியாக உணவு உண்ணாதபோது எந்தத் தாய்தான் கவலைப் படாது இருக்கின்றாள்? அவள் [மரியாள்] தமது மகனின் சித்தம் தெளிவாக உள்ளதா இல்லையா என்பதுபற்றி அநேகமாக கவலைப்பட்டிருக்க மாட்டாள், ஆனால் அவருடைய பாதுகாப்பு குறித்து அவள் [மரியாள்] சுலபமாகக் கவலை கொண்டிருந்திருப்பாள்.[8]*

*மரியாள் மற்றும் இயேசுவின் சகோதரர்கள் ஆகியோரின் நோக்கங்கள் மீது நாம் சாத்தியமான மிகச் சிறந்த கட்டமைவை இடவேண்டும் என்று தர்ம சிந்தனை கட்டளையிடுகிறது. அவர்களின் நோக்கங்கள் தவறாக வழிநடத்தப்பட்டிருப்பினும், அவர்கள் தங்கள் இடையீடானது "அவரது சொந்த நன்மைக்கானதாகவே" இருக்கும் என்று நினைத்திருக்கலாம்.*

*அது நம்மை மாற்கு 3:31ம் வசனத்திடம் கொண்டு வருகிறது: இயேசு இருந்த இடத்திற்கு "அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து" சேர்ந்தார்கள் (வ. 31அ). "அவரைச் சுற்றிலும் ஜனங்கள் உட்கார்ந் திருந்தார்கள்'' (வ. 32அ) மற்றும் கிறிஸ்து ''ஜனங்களோடே பேசி''க் கொண்டிருந்தார் (மத். 12:46). மரியாளும் இயேசுவின் சகோதரர்களும் ''ஜனக்கூட்டத்தினாலே அவரண்டையில் … சேரக்கூடாது'' இருக்கு மளவுக்கு மக்கள் இயேசுவைச் சுற்றிலும் நெருக்கமாய் உட்கார்ந்திருந் தார்கள் (லூக். 8:19[9]).*

*மத்தேயுவின் சுவிசேஷ விவரத்தின்படி, ''அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்றார்கள்" (12:46). அவர்கள் அநேகமாக இயேசுவின் கவனத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கலாம், ஆனால் ஒன்று அவர்களின் குரலை அவர் கேட்கா திருந்திருப்பார் அல்லது அவர்களை அவர் கண்டும் காணாதவர் போல் இருந்திருப்பார். பின்பு அவர்கள், அவருடன் பேச விரும்புவதாக வார்த்தை சொல்லி அனுப்பினார்கள். அவர்கள் கூட்டத்தின் மூலையில் இருந்த ஒரு*

நபரிடத்தில் கிசுகிசுப்பதையும் பின்பு அந்த நபர் தனக்கு முன்னால் இருந்த நபரிடத்தில் கிசுகிசுப்பதையும் இப்படியே விஷயம் முன்சென்றதையும் நான் [கற்பனையில்] காண முடிகிறது: "முன்னால் இருப்பவரிடத்தில் இதைச் சொல்லு. இயேசுவின் தாயும் சகோதரர்களும் இங்கிருக்கின்றார்கள்! அவர்கள் அவரைப் பார்க்க விரும்புகின்றார்கள்!" கடைசியில் இந்தச் செய்தியானது முன்வரிசையில் அமர்ந்திருந்தவர்களிடத்திற்குச் சென்றது, மற்றும் பலர்[10] கிறிஸ்து போதிப்பதை இடைமறித்தார்கள்: "இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள்" (மாற். 3:32).

அவர்களின் நோக்கங்கள் நல்லதோ, மோசமானதோ அல்லது இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதோ, எப்படியிருந்தாலும், இயேசு தமது போதனையை முடிக்கும் வரையிலும் காத்திருக்க, அவரது குடும்பத்தினர் மனவிருப்பம் இல்லாதிருந்ததில் ஒரு துடுக்குத்தனம் இருந்தது. உண்மையில் அவர்கள், "நாங்கள் *குடும்பத்தாராக* இருக்கின்றோம். நீர் [போதிப்பதை] நிறுத்திவிட்டு இப்போதே எங்களைப் பார்க்க வேண்டும். *நீர்* இப்போது செய்துகொண்டிருப்பதைக்காட்டிலும் *நாங்கள்* விரும்புவது மிகவும் முக்கியமானதாக உள்ளது!" என்றே கூறினார்கள்.

**இயேசுவின் ஆவிக்குரிய குடும்பம்**

துடுக்குத்தனமான இந்த வேண்டுகோளானது கிறிஸ்துவை, "மிகுந்த வேதனை நிறைந்த சூழ்நிலை ஒன்றில், பூமிக்குரிய அவரது ஊழியத்தில் மிகவும் நுட்பமான இக்கட்டுகள் ஒன்றில்" இட்டது.[11] அவர் தமது குடும்பத்தவர்களின் முயற்சிகளுக்குத் தடைவிதிக்கத் தயக்கமாய் இருந்திருப்பார், ஆனால் அவர்களுக்கும் - மற்றும் அங்கிருந்த மற்றவர் களுக்கும் - தமது ஊழியத்தின் இயல்பையும் முக்கியத்துவத்தையும் பற்றி அவர் தெரிவிக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

நான் இந்த இக்கட்டான நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்றால், நான் அநேகமாக திகைப்பில் ஆழ்ந்திருப்பேன். ஒரே ஒருமுறை ஒரு பேச்சுரையின் இடர்ப்பாட்டின்போது அரைகுறை அறிவுணர் வுடனும் கூட ஏதேனும் கூறுவதற்கு நான் தெளிவான மனநிலை கொண்டிருக்க வேண்டியிருந்ததை என்னால் நினைவுகூர முடிகிறது. நான் ஒக்லாஹாமாவின் தெலேகுவா என்ற இடத்தில் இருந்த கிறிஸ்துவின் சபையில் இருந்த ஒரு கலையரங்கில் காட்சி உதவிகளைச் செயல்விளக்கப் படுத்திக் கொண்டிருந்தேன். நான் நடைமேடையின் மீது முன்னும் பின்னு மாக வேகமாய் நடந்து கொண்டிருந்தேன், அதில் போதனை உதவிப் பொருட்கள் நிறைந்திருந்தன. ஒரு சமயத்தில் நான் - நடைமேடையின் ஒரு புறமாக இருந்த ஆழமான படிக்கிணற்றுக்குள் - பின்னோக்கி அடியெடுத்து வைத்துவிட்டேன். படிகளில் கால்களைப் பரப்பியவாறே நான், "இது 'இப்படியிருக்கத் தன்னை நிற்கிறவன் என்று நினைக்கிறவன் விழாதிருக்கும் படி எச்சரிக்கையாயிருக்கக் கடவன்' என்ற வசனப்பகுதியை விவரிக்கிறது" என்று உளறிக் கொட்டுவதற்கு என்னைச் சமாளித்து நின்றேன். இருப்பினும், சாதாரணமாக, நான் ஒரு புதிய இடர்ப்பாட்டை

எதிர்கொள்ளும்போது பேச்சற்றவனாகவே இருக்கின்றேன்.

போதகர்களுக்கெல்லாம் போதகர், இந்த சூழ்நிலையை எதிர் கொண்டபோது என்ன செய்தார்? அவர் காலத்திற்கு ஏற்காத இடையூறை காலத்திற்கு ஏற்ற அறிவுறுத்தலாகத் திருப்பினார். அவர், "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?'' என்று கேட்டார் (மத். 12:48). பின்பு அவர், "... பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்று பதில் அளித்தார் (மத். 12:50).

கிறிஸ்து அந்த வார்த்தைகளைப் பேசியபோது, அவர் குடும்பத்தை மதிப்புக்குறைக்கவில்லை.[12] சில மார்க்கப் பிரிவுகள், தங்களின் சீஷர்கள் அவர்களின் இயல்பான குடும்பங்களுடன் உள்ள அவர்களின் பிணைப்புக் களை முறிக்கும்படி வற்புறுத்துகின்றன, ஆனால் அப்படிப்பட்ட கொள்கை எதையும் இயேசு போதிக்கவோ அல்லது உற்சாகப்படுத்தவோ இல்லை. அவரைப் பொறுத்தமட்டில் குடும்பம் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர், வேதபாரகர்களும் பரிசேயர்களும் தங்கள் பெற்றோர் களை மதிக்கவும் பராமரிக்கவும் தவறியதற்காக அவர்களைக் குற்றப்படுத்தி னார் (மத். 15:1-8). அவர் மரிப்பதற்கு முன்பு, தமது தாயார் பராமரிப்பில் ஒப்புவிக்கப்படுதலை நிச்சயப்படுத்திக் கொண்டதென்பது அவர் மேற்கொண்ட கடைசி நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது (யோவா. 19:26, 27). வில்லியம் அர்நாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> அவர் ஒரு மகன் மற்றும் சகோதரர் என்ற வகையில் தமது தாயையும் சகோதர சகோதரிகளையும் உண்மையான பிரியத்துடன் அன்பு கூர்ந்தார். அவர் தாம் ஒரு பச்சிளம் குழந்தையாக இருந்தபோது படுத்துறங்கியிருந்த மடியை, தாம் ஒரு இளைஞரானபோது ஒருக்காலும் பிய்த்துப் போடவில்லை. அவரது பிறப்பிலிருந்து அவரைப் பேணிக்காத்த பெண், அவரது மரணம் வரைக்கும் அவரது இருதயத்திற்கு அன்பார்ந்தவராக இருந்தார்.[13]

இருந்தபோதிலும் கர்த்தர், பூமிக்குரிய எந்தப் பிணைப்பைக் காட்டிலும் ஆழமான, அதிகம் மதிப்பு வாய்ந்த மற்றும் அதிகம் பிணைகின்ற ஒரு உறவு உள்ளது என்பதைத் தெளிவாக்க விரும்பினார்.

இந்தக் கருத்தைக் கொண்டுவருவதற்கு, கிறிஸ்து "தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து, இதோ, என் தாயும், என் சகோதரரும் இவர்களே" என்று கூறினார் (மாற். 3:34). மத்தேயு சுவிசேஷ விவரத்தின்படி, அவர் "தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி, இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்தி லிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்'' என்று கூறினார்[14] (மத்.12:49-50).

இயேசுவின் எந்த சீஷர்கள் அவரது "சகோதரர்களாக" இருக்கத் தகுதி பெற்றார்கள், எந்த சீஷர்கள் அவரது ''சகோதரியாக'' இருக்கத் தகுதி பெற்றார்கள், அல்லது எந்த சீஷர்கள் அவரது "தாயாக" இருக்கத் தகுதி

பெற்றார்கள் என்று உங்களுக்குள் சிந்தித்துக் கவலைக் கொண்டிருக்காதீர்கள்.[15] அவர் கிறிஸ்தவர்களை மூன்று வித்தியாசமான பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக இது, "எனது பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவர்களே எனது குடும்பமாக, எனது ஆவிக்குரிய குடும்பமாக இருக்கின்றார்" என்று கூறுவதற்கான அவரது வலிவார்ந்த வழிமுறையாக இருந்தது. லூக்காவின் சொல்வழக்கைப் பயன்படுத்துவது என்றால், அவர் "தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்கள்" தமது குடும்பத்தினராக உள்ளனர் என்று வலியுறுத்தினார் (லூக். 8:21).

மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில், பிதாவின் "சித்தத்தை" நிறைவேற்றுதல் என்பதைப் பற்றி கிறிஸ்து பேசியிருக்கையில் அவர் லூக்கா சுவிசேஷத்தில் "தேவனுடைய வசனம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். இதில் முரண்பாடு எதுவும் இருப்பதில்லை. தேவனுடைய வசனமே நாம் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளக் கூடிய ஒரே வழியாக உள்ளது.

நாம் கர்த்தருடைய குடும்பத்தின் அங்கமாயிருக்க வேண்டுமென்றால், நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்கவேண்டும் - பின்பு அதின்படி செய்ய வேண்டும் (மத். 7:21-27ஐக் காணவும்).[16] "செய்தல்" என்பதில் அடங்கியுள்ளது என்ன? வசனத்தின்படி செய்தல் என்பது, அது போதிக்கிற எல்லாவற்றையும் விசுவாசித்தல், அது கட்டளையிடுகிற எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிதல், அது வாக்களிக்கிற எல்லாவற்றிற்காகவும் நம்பியிருத்தல் என்பதாகிறது.[17]

கிறிஸ்துவின் நாட்களில் இருந்த யூதர்களுக்கு இந்தப் பாடம் அவசியமாயிருந்தது. அவர்கள், ஆபிரகாமின் சரீரப் பிரகாரமான குடும்பத்தில் சந்ததியாராயிருத்தலின் உரிமையினால் தாங்கள் எப்போதும் தேவனுடைய குடும்பத்தில் அங்கமாயிருப்போம் என்று நினைத்தார்கள் (லூக். 3:7-9; யோவா. 8:39 ஆகிய வசனங்களைக் காணவும்). மாம்சப் பிரகாரமான வம்ச வழியானது தேவனுடைய வீட்டில் ஒரு இடத்தை உத்தரவாதப்படுத்துவது இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாயிருந்தது (ரோமர் 9:6, 7ஐக் காணவும்). ஆபிரகாமின் சந்ததியாராக இருத்தல் என்பது இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்தல் என்பது போன்று அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. முன் வம்சவழி அல்ல ஆனால் செயல்பாடு என்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர்கள் பிதாவுடன் ஒரு தொடர் உறவை விரும்பினார்களென்றால், அவர்கள் கேள்விப்பட்டு செய்ய வேண்டியிருந்தது.

உங்களுக்கும் எனக்கும்கூட இந்தப் பாடம் அவசியமாக உள்ளது. வசனத்தைக் கேள்விப்படுதல் என்பது முக்கியத்துவமானதாக உள்ளது (ரோமர் 10:17). வேதாகமத்தை அன்றாடம் வாசித்தலும் (அப். 17:11) இயன்ற வரையிலும் ஒவ்வொரு வேதபாட வகுப்பிலும் எல்லா ஆராதனை ஊழியங்களிலும் கலந்துகொள்ளுதலும் (எபி. 10:25) பாராட்டத்தக்கதாக உள்ளது. ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்கையில் அவரது உரையைக் கேட்பவர்கள் தங்கள் வேதாகமங்களைத் திறந்து வைத்து, குறிப்புகள் எடுத்துக் கொண்டிருப்பதைக் காணும் பிரசங்கியார் மெய்சிலிர்த்துப்

போகின்றார் (சங். 119:16ஐக் காணவும்). இருந்தபோதிலும், இந்த நடவடிக்கைகள் பாராட்டத்தக்கதாக இருப்பது போலவே, ஒருவர் வசனத்தைக் கேட்டும் தாம் கேட்கின்றவற்றின்படி செய்யாமலிருந்தால் இவைகள் "ஒன்றுக்கும் பயனற்றவைகளாக"[18] உள்ளன. இயேசுவின் அரைசகோதரரான யாக்கோபு, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்று எழுதினார் (யாக். 1:22).

எனவே, இயேசு இரண்டு குடும்பங்களைக் கொண்டிருந்தார் என்று நாம் கண்டுள்ளோம் - முதலாவது, சரீரப்பிரகாரமான குடும்பமாகவும், இரண்டாவது ஆவிக்குரிய குடும்பமாகவும் இருந்தன. இதில் இரண்டாவது குடும்பத்தில், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அங்கமாகின்றார் என்று அவர் போதித்தார். சரீரப்பிரகாரமான குடும்பம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதோ அவ்வளவிற்கு ஆவிக்குரிய குடும்பம் எல்லையற்ற வகையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்று அவர் வலியுறுத்தினார்.

## கிறிஸ்தவரின் இரண்டு குடும்பங்கள்

இப்போது நாம், நீங்களும் நானும் அங்கம் வகிக்கக் கூடிய இரண்டு குடும்பங்களின் பக்கமாகத் திரும்புவோம்.

***சரீரப் பிரகாரமான குடும்பங்கள்***

நான் டேவ் H. மற்றும் லில்லியன் ரோப்பர் என்ற கிறிஸ்தவப் பெற்றோர் இருவரையும், காய் ரோப்பர் என்ற ஒரு சகோதரரையும் உடையவனாயிருந்து ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். எனக்கு ஒரு கிறிஸ்தவ மனைவியான ஜோவையும், சின்டி, டெபி மற்றும் ஆஞ்சி என்ற மூன்று மகள்களையும், ரிச்சர்டு ஹொனேக்கர் மற்றும் டேன் லவ்ஜாய் என்ற மருமகன்களையும், சேத் டேவிட் மற்றும் இராகேல் என்ற பேரக்குழந்தை களையும் கர்த்தர் கொடுத்து என் வாழ்வை மென்மேலும் ஆசீர்வதித் துள்ளார். இவர்களும் எனது குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் எனக்கு என் உயிரை விட மேலானவர்களாக உள்ளனர்.

நீங்களும் கூட ஒரு சரீரப்பிரகாரமான குடும்பத்தில் பிறந்திருக்கின்றீர் கள். அது ஒரு கிறிஸ்தவக் குடும்பமாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன்; ஆனால் அது கிறிஸ்தவக் குடும்பமாய் இல்லாதிருப்பினும். நீங்கள் உங்கள் மீது அக்கறை செலுத்தக்கூடிய மற்றும் உங்கள் தேவைகளை நிறைவேற்றக் கூடிய மக்களைப் பெற்றிருப்பீர்கள். ஒருவேளை என்னைப் போன்று, நீங்களும் திருமணமாகி, பிள்ளைகளைப் பெற்றிருக்கலாம் அல்லது அவ்வாறு பெறாதிருக்கலாம். உங்கள் சூழ்நிலை எதுவாயிருப்பினும், நீங்கள் குடும்பத்தின் அடிப்படை மதிப்பை பாராட்டுவீர்கள் என்று நான் நம்புகின்றேன். இது தேவனுடைய முதல் நிறுவனமாக இருந்தது (ஆதி. 2:18, 21-24; 4:1) மற்றும் இது இன்னமும் சமுதாயத்தின் மூலைக்கல்லாக உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இன்றைய நாட்களில் சிலர் குடும்பம் எவ்வளவு

தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது என்பதை புரிந்து உணர்வதில்லை. சிலர் தங்கள் குடும்பங்களைக் கைவிட்டிருக்கையில், மற்றவர்கள் அவற்றைப் புறக்கணிக்கின்றார்கள். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதில்லை, சில பிள்ளைகள் வயதான தங்கள் பெற்றோர்களைப் பராமரிப்பதில்லை. பவுல், "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷ மாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்'' என்று எழுதினார் (1 தீமோ. 5:8). மீண்டும் அவர், பிள்ளைகளும் பேரப்பிள்ளை களும் ''முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து'' (1 தீமோ. 5:4) நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

**ஆவிக்குரிய குடும்பம்**

சரீரப் பிரகாரமான குடும்பம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொண்டால், பின்வரும் கூற்றானது ஒரு தனிப்பட்ட அர்த்தத்தை மேற்கொள்ளுகிறது: மிகவும் முக்கியமான குடும்பம் ஒன்றுள்ளது - இது ஆவிக்குரிய குடும்பமாகும், இது தேவனுடைய குடும்பமாகும். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து" என்று எழுதினார் (எபே. 2:19). "வீட்டார்" என்ற வார்த்தையானது "குடும்பத்தார்" என்பதைக் கூறுகிற இன்னொரு வழிமுறையாக உள்ளது. The New Century Version என்ற வேதாகம மொழி பெயர்ப்பு, இவ்வசனத்தின் கடைசிப் பகுதியை "நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கு உரியவர்களாயிருக்கின்றீர்கள்'' என்று தரவழைக்கிறது. கலாத்தியர் 6:10ல் இந்தக் குடும்பம் "விசுவாச குடும்பத் தார்" என்று அழைக்கப்படுகிறது. 1 பேதுரு 4:17ல் இது "தேவனுடைய வீடு" என்று அழைக்கப்படுகிறது.[19]

இந்த ஆவிக்குரிய குடும்பம் என்பது என்ன? இது சபையே என்று பவுல் கூறினார். அவர் தீமோத்தேயுவுக்கு, "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" என்று கூறினார் (1 தீமோ. 3:15).

இந்தக் குடும்பத்தில் தேவன் நமது பிதாவாக இருக்கின்றார் (மத். 6:9; ரோமர் 1:7), மற்றும் நாம் அவரது பிள்ளைகளாக இருக்கின்றோம் (யோவா. 1:12, 13; ரோமர் 8:14, 15; எபே. 5:1; பிலி. 2:15; 1 யோவா. 3:1, 2). பவுல், "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளா னால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே ..." என்று எழுதினார் (ரோமர் 8:16, 17). அப்போஸ் தலரான பவுல் தேவனிடத்திலிருந்து பின்வரும் வார்த்தைகளை மேற்கோள் காண்பித்தார்: "... உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள

*கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொரி. 6:18). ஆவிக்குரிய இந்த வீட்டில், சபையின் பிற உறுப்பினர்கள் நமது சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் இருக்கின்றார்கள் (அப். 6:3; ரோமர் 16:1; 1 கொரி. 7:15; பிலே. 1, 2; யாக். 2:15).*[20]

*நாம் இந்தக் குடும்பத்தில் எவ்வாறு அங்கமாகின்றோம்? நாம் வசனத்தைக் கேள்விப்பட்டு அதின்படி செய்கின்றபோது நாம் இயேசுவின் குடும்பத்தில் அங்கமாவதாக அவர் கூறினார். நாம் "ஒரு புதிய பிறப்பின்" மூலம் தேவனுடைய பிள்ளைகளாகின்றோம் என்று யோவான் எழுதினார் (யோவா. 1:11-13; 3:3, 5ஐக் காணவும்). மக்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, தங்கள் பாவங்களில் இருந்த மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்புக்கென்று (தண்ணீரில் முழுக்காட்டப்படும்) ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் அங்கமாகின்றார்கள் என்று லூக்கா பதிவுசெய்துள்ளார் (அப். 2:36-38, 41, 47;*[21] *1 கொரி. 12:13ஐக் காணவும்). இது, தேவனுடைய குடும்பத்தில் அங்கமாவதற்கு மூன்று வழிகள் உள்ளன என்று அர்த்தப்படுவதில்லை; மாறாக, இயேசுவும் யோவானும் லூக்காவும் ஒரு செயல்முறை பற்றியே குறிப்பிட்டார்கள். அந்தச் செயல்முறை என்ன?*

*நாம் வசனத்தைக் கேள்விப்படுகின்றோம், அது [நமக்குள்] விசுவாசத்தை உண்டாக்குகிறது (ரோமர் 10:17). பின்பு நாம் - நமது பாவங்களிலிருந்து மனந்திரும்புவதன் மூலம் (லூக். 13:3), இயேசுவின்மீது நமக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதன் மூலம் (மத். 10:32), மற்றும் ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்காட்டப்படுதல்) பெறுவதன் மூலம் (மாற். 16:16; அப். 22:16) - அந்த வசனத்தின்படி "செய்ய" வேண்டும். நாம் அதைச் செய்யும்போது, நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் "தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்கின்றோம்" (யோவா. 3:5). பேதுரு, "... நீங்கள் ... ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் ... அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று எழுதினார் (1 பேது. 1:22, 23). இவ்வாறு நாம் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாகின்றோம்.*

*சரீரப்பிரகாரமான குடும்பத்திற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். சபை என்கிற தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்காக நான் அவருக்கு அதிக நன்றியைச் செலுத்துகின்றேன். இங்கு இவ்விரு குடும்பங்களையும் பற்றிய ஒரு சுருக்கமான ஒப்பீடு உள்ளது: சரீரப்பிரகாரமான குடும்பம் மற்றும் ஆவிக்குரிய குடும்பம் ஆகிய இரண்டுமே தேவனால் ஏற்படுத்தப்பட்ட நிறுவன அமைப்புகளாக உள்ளன. இவற்றில் முதலாவது இயல்பானதாக உள்ளது; இரண்டாவது இயற்கைக்கு மேலானதாக உள்ளது. முதலாவது ஒரு சரீரப்பிரகாரமான பிறப்பினால் பிரவேசிக்கப்படக் கூடியதாக உள்ளது, இரண்டாவது ஒரு ஆவிக்குரிய பிறப்பினால் பிரவேசிக்கப்படக் கூடியதாக உள்ளது. முதலாவது, பிறப்பு உற்பத்தியை நோக்கமாகக் கொண்டுள்ளது, இரண்டாவது மறுபிறப்பை நோக்கமாகக்*

கொண்டுள்ளது (தீத்து 3:5). முதலாவது காலத்திற்கு உரியதாக உள்ளது (மத். 22:30), இரண்டாவது காலத்திற்கும் நித்தியத்திற்கும் உரியதாக உள்ளது (எபி. 12:23). முதலாவது முக்கியமானதாக உள்ளது; இரண்டாவது அத்தியாவசியமானதாக/இன்றியமையாததாக உள்ளது.[22] முதலாவது நல்லதாக உள்ளது; இரண்டாவது மேன்மையானதாக உள்ளது. இவ்விரண்டிலும் பிரவேசித்தல் என்பது துன்புறுதலினாலேயே நடைபெறுகிறது என்பதையும் நான் சேர்க்க வேண்டும்: முதலாவதில் நமது தாய்மார்களின் துன்புறுதலினாலே பிரவேசிக்கின்றோம்; இரண்டாவதில் நமது பாவங்களுக்காக சிலுவையில் இயேசுவின் துன்புறுதலினால் பிரவேசிக்கின்றோம்! (அப். 20:28; எபே. 5:23, 25ஐக் காணவும்).

உண்மையான வாரிசுமுறைமை என்பது பொதுவான அனுபவம் கொண்டிருத்தல், பொதுவான ஆர்வம் கொண்டிருத்தல், பொதுவான கீழ்ப்படிதல் கொண்டிருத்தல் மற்றும் பொதுவான இலக்கைக் கொண்டிருத்தல் ஆகியவற்றிலேயே அமைந்துள்ளது என்று வில்லியம் பார்க்ளே என்பவர் எழுதினார்.[23] இவை யாவற்றையும் நாம் தேவனுடைய குடும்பமாகிய சபையில் காண்கின்றோம். சபையின் உறுப்பினர் ஒருவர், தாம் தமது மாம்சப் பிரகாரமான சகோதர சகோதரிகளிடத்தில் இருப்பதைக் காட்டிலும், கிறிஸ்துவுக்குள்ளான தமது சகோதர சகோதரிகளிடத்தில் அதிக நெருக்கமாக உணருவதாக நான் கேள்விப்பட்டுள்ள முறைகளை எண்ணிக் கணக்கிட இயலாது.

தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினராயிருத்தல் என்பது எவ்வளவு அற்புதமானதாக இருக்கும் என்று விளக்குவதற்கு, நான் வார்த்தைகளில் குறைவுபடுகின்றேன். அரசரைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அரச குடும்பத்தில் ஒரு உறுப்பினராக இருத்தல் என்பது கனத்திற்குரியதாக இருக்கும். திரளான செல்வம் கொண்ட ஒருவரைத் தந்தையாகப் பெற்றிருப்பதில் எண்ணற்ற அனுகூலங்கள் இருக்கும். ஆயினும் இவை எதுவும், கர்த்தருடைய குடும்பத்தில், தேவனை உங்கள் பிதாவாகக் கொண்டிருக்கும் நிலையுடன் ஒப்பிடப்படக் கூடியதாக இருப்பதில்லை! காலம் சென்ற C.R. நிக்கொல்ஸ் அவர்கள், “உலகத்தையே சொந்தமாய்க் கொண்டிருந்தது” போல் தாம் நடந்துகொள்வதாகக் குறிப்பிட்டார். அதற்கு, மதிப்பிற்குரிய அந்த முதிர்வயதான பிரசங்கியார், “எனது தந்தை அப்படியே செய்கிறார்! [இவ்வுலகமே அவருக்குச் சொந்தம்]” என்று பதில் அளித்தார்.

ஆவிக்குரிய குடும்பம் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், இந்தக் குடும்பத்தின் மீதான நமது பற்றுறுதியானது மற்ற எல்லாப் பற்றுறுதிகளையும் கடந்து நிற்க வேண்டும் என்று இயேசு போதித்தார்.[24] லூக்கா 14:26ல் அவர் பின்வரும் திகைப்பூட்டும் வார்த்தைகளைக் கூறினார்: “யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்.” கோர்டன் பாவெல் அவர்கள் ஒருமுறை தனது வானொலி உரையைக் கேட்பவர்களை, “இயேசுவின் கடினமான கூற்றுக்கள்” என்ற

பிரசங்கத் தொடருக்காகத் தலைப்புக்களைப் பட்டியலிடும்படிக்கு அழைப்பு விடுத்தார். அவர் வேறு எந்த வசனப்பகுதியைக் காட்டிலும், லூக்கா 14:26ன் மீது பிரசங்கிக்கும்படியாக அதிகமான வேண்டுகோள் களைப் பெற்றார்.[25]

லூக்கா 14:26ல் உள்ள "வெறுத்தல்" என்ற வார்த்தையானது நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் "வெறுத்தல்" என்ற வார்த்தையின் அர்த்தத்தை குறிப்பதில்லை என்று நீங்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கலாம். இது உண்மையல்லவென்றால், இயேசு தமக்குத் தாமே முரண்படுகின்றவராக இருந்திருப்பார். மலைப் பிரசங்கத்தில் அவர், மக்கள் தங்கள் விரோதிகளைச் சிநேகிக்க வேண்டும் என்று போதித்திருந்தார் (மத். 5:44). நாம் நமது விரோதிகளைச் சிநேகிக்கவும் அதே வேளையில் நமது சொந்த வீட்டாரை வெறுக்கவும் வேண்டுமென்று அவர் கூறியிருக்க மாட்டார் என்பது நிச்சயமாகும்.

வேதாகமத்தில், "வெறுத்தல்" என்பது சிலவேளைகளில் "குறைவாக அன்புகூருதல்" என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது என்று நாம் கண்டறியும்போது முரண்பாடாகத் தோன்றும் இவ்விஷயமானது மறைகிறது (உபா. 21:15ஐக் காணவும்). லூக்கா 14:26ன் கூற்றை இதற்கு ஒப்புமையான இன்னொரு கூற்றான மத்தேயு 10:37உடன் ஒப்பிட்டுக் காணும்போது, "வெறுத்தல்" என்பது அர்த்தம் இதுவே என்பது நமக்கு உறுதியாகிறது: "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் *அதிகமாய்* நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் *அதிகமாய்* நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." இவ்விதமாகக் கிறிஸ்து, லூக்கா 14:26ல், நாம் அவரையும் தேவனையும் நேசிக்கும் அளவிற்குக் குறைவாகவே நமது சரீரப் பிரகாரமான குடும்பங் களை நேசிக்க வேண்டும் என்று கூறினார்.

ஆயினும், நாம் லூக்கா 14ன் தீவிரமான வார்த்தைகளை அவைகள் தங்களின் செயல்வலிவை இழக்கும் அளவுக்கு நீர்த்துப் போகச் செய்யக் கூடாது. தேவன் மீதும் அவரது குடும்பத்தின் மீதும் நாம் கொள்ளும் அன்பானது ஒப்பீட்டளவில் நமது சரீரப்பிரகாரமான குடும்பங்களின் மீது நாம் கொண்டுள்ள அன்பானது *வெறுப்பு* என்று அழைக்கப்படுமளவுக்கு மாபெரியதாக இருக்க வேண்டும்.[26]

இது, நாம் நமது இயல்பான குடும்பங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை என்று நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். சபையை/ராஜ்யத்தை முதலிடத்தில் வைக்கின்றவர்களில் (மத். 6:33) பெரும்பான்மையானவர்கள் தங்கள் சரீரப்பிரகாரமான குடும்பங்களின் உறவுமுறைகள் மேம்படுத்தப்படுவதைக் கண்டறிகின்றார்கள் (எபே. 5:25, 28, 33; 6:1-4).[27] வில்லியம் ஹென்ரிக்சென் அவர்கள், "நமது ஆவிக்குரிய குடும்பத்தின்மீது பற்றுறுதியாய் இருத்தல் என்ற இந்த சட்டத்தைக் கடைப்பிடித்தலானது ... நாம் நமது பூமிக்குரிய குடும்பத்திற்கு மிகச் சிறந்த சேவையைச் செய்ய இயல்வதைத் தரவழைக்கிறது" என்று கூறினார்.[28]

# உங்கள் இரண்டு குடும்பங்கள்

*நாம் இயேசுவின் இரண்டு குடும்பங்களைப் பற்றியும் கிறிஸ்தவரின் இரண்டு குடும்பங்களைப் பற்றியும் எடுத்துரைத்துள்ளோம். இப்போது நாம் உங்கள் இரண்டு குடும்பங்களை இன்னும் நெருக்கமாகக் கண்ணோக்குவோம்.*

***இரண்டும் இசைவில்***

*உங்கள் இரண்டு குடும்பங்களும் ஒன்று கலந்திருக்கும்போது நீங்கள் "இரு உலகங்களிலும் மிகச் சிறந்ததை"க் கொண்டிருக்கின்றீர்கள்.*

*சற்று நேரத்திற்கு நாம் இப்பிரசங்கத்தைத் தொடங்கிய இடத்தில் நாம் கண்ட வரலாற்றிற்குத் திரும்புவோம். இந்த நிகழ்ச்சியைப் பதிவு செய்ததில் இதன் எழுத்தாளர்கள் வழக்கம்போலவே, நமக்கு நிகழ்ச்சிகளை வரிசை முறைமையாகக் கூறுவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. இயேசுவின் கடிந்து கொள்ளுதலுக்குப் பின்பு, அவரது தாயும் சகோதரர்களும் அருகிலேயே இருந்தார்களா? மக்கட்கூட்டத்திற்கு இயேசு தமது போதனையை முடித்தபின்பு, அவர் தமது குடும்பத்தாரைச் சந்தித்தாரா? இவைகளைப் பற்றி நமக்குக் கூறப்படவில்லை. ஒன்றை மட்டும் நாம் நிச்சயமாகக் கூற முடியும்: இயேசு தமது ஊழியத்திலிருந்து தம்மை நீக்கிப்போடுவதற்கு, அவர்களையோ [தமது குடும்பத்தாரையோ] அல்லது வேறு எவரையுமோ அனுமதித்ததில்லை. கட்டாயப்படுத்தப்பட்ட* **ஓ** *மற்றும்* **பொ** *வுக்காக*[29] *எவரொருவரும் அவரை வீட்டிற்கு இழுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். இயேசு தமது ஊழியத்தில் ஒரு இடைவேளையைக் கொண்டிருந்தபோது, தமது குடும்பத்தாரைப் புறக்கணிக்காமல் இருந்தார் என்பதிலும் நாம் நியாயமான வகையில் உறுதியாய் இருக்க முடியும். அவரது தாயாரும் அவரது சகோதரர்களும் அவரது வாழ்வின் விவரங்களில் மீண்டும் தோன்றுவார்கள், அவர்களுடனான பிணைப்பை இயேசு முறித்துக் கொண்டார் என்பதற்கான குறிப்பு எதுவும் இருப்பதில்லை (யோவா. 7:2-10; 19:25-27).*

*ஆயினும் இயேசுவின் குடும்பத்துடன் அவருக்கிருந்த உறவுமுறைக்குத் திரும்புவதில், இந்த வரலாறு நிறைவில் ஒரு மகிழ்வான முடிவைக் கொண்டிருந்ததை வலியுறுத்துதல் என்பதே எனது நோக்கமாக உள்ளது. முடிவில், அவருடைய சகோதரர்கள் அவரை விசுவாசித்தார்கள். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர் தந்த தரிசனங்களில் ஒன்று அவரது அரை சகோதரரான யாக்கோபுவுக்கு அருளப்பட்டது (1 கொரி. 15:7). பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருக்கையில் அவர்களுடன் இயேசுவின் தாயாரும் சகோதரர்களும் இருந்தார்கள் (அப். 1:14). யாக்கோபு, எருசலேமில் இருந்த சபையின் முன்னோடிகளில் ஒருவரானார் (அப். 12:17; 15:13; 21:18; கலா. 1:19) மற்றும் இவர் யாக்கோபு நிருபத்தையும் எழுதினார் (யாக். 1:1). இயேசுவின் அரைசகோதரர்களில் இன்னொருவரான யூதா, ஒரு நிருபத்தை எழுதினார் (யூதா 1). சபை வரலாற்றாளரான யூசுபியஸ் என்பவர், இயேசுவின் மற்ற சகோதரர்களும் பல்வேறு இடங்களில் இருந்த சபைகளில் முன்னின்று*

*நடத்துபவர்களாகச் செயல்பட்டார்கள் என்று கூறினார் (1 கொரி. 9:5ஐக் காணவும்).*

*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இயேசுவின் சரீரப்பிரகார மான குடும்பம், கடைசியில் அவரது ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கமா யிற்று! எனது தந்தையும் தாயும் கிறிஸ்தவர்களாக இருப்பதற்காக, எனது மனைவி ஒரு கிறிஸ்தவளாக இருப்பதற்காக, எனது மூன்று மகள்களும் எனது இரண்டு மருமகன்களும் கிறிஸ்தவர்களாக இருப்பதற்காக, எனது இரண்டு பேரக்குழந்தைகளில் மூத்தவரனான சேத் டேவிட் சில நாட்களுக்கு முன்பு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதற்காக நான் நன்றி நிறைந்தவனாக இருக்கின்றேன்! தேவனுடைய அரியணைச் சுற்றிலும் எனக்கு அன்பார்ந்தவர்களுடன் கரம் இணைத்து அவரது துதியைப் பாடுதலைக் காட்டிலும் மாபெரும் விருப்பம் வேறெதுவும் எனக்கு இல்லை!*[30]

*நீங்கள் இவ்விதமான மகிழ்ச்சியைக் கண்டடைய வேண்டும் என்பதே உங்களுக்காக எனது ஜெபமாயுள்ளது.*

### *இரண்டும் முரண்பாட்டில்*

*துரதிர்ஷ்டவசமாக, இரண்டு குடும்பங்களும் எப்போதுமே ஒன்று கலந்து இருப்பதில்லை. சில வேளைகளில் தீவிரமான முரண்பாடு ஏற்படுகிறது. இதை இயேசு முன் எதிர்பார்த்தார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணா திருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே (மத். 10:34-36).*

*அவர் தமது சீஷர்களிடத்தில், "பெற்றோராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலை செய்வார்கள்" என்று கூறினார் (லூக். 21:16). இவ்விரு வசனங்களும், குடும்பங்களில் கிறிஸ்து பிரிவினையை விரும்பினார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, சுவிசேஷத்தின் இயல்பும் அது கேட்கின்ற ஒப்புக்கொடுத்தலும் உலக சிந்தை உடையவர்களால் புரிந்து கொள்ளப்படாது என்பதையும் ஆகையால் அவ்வப்போது சச்சரவு என்பது தவிர்க்க இயலாததாக இருக்கும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.*

*நான் எதைப் பற்றிப் பேசுகின்றேன் என்று உங்களில் சிலர் மிகச் சரியாக அறிந்திருப்பீர்கள். இயேசு தமது சுயதேவைகளுக்கும் மேலாக தேவனு டைய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தபோது, அவர் மதிமயங்கி யிருந்தார் என்று அவரது நண்பர்களும் குடும்பத்தாரும் நினைத்தார்கள். நீங்கள் சரியானதை செய்வதற்குத் தீர்மானித்தபடியினால் "பைத்தியக் காரர்" என்று அழைக்கப்பட்டிருக்கலாம். விஷயம் அதுவாக இருந்தால், அது கடினமானதாக உள்ளது, அல்லவா?*

*நீங்கள் உங்கள் வீட்டில் அல்லது உங்கள் நண்பர்களின் வட்டாரத்தில் கலகத்தைத் தூண்டுவதற்கு உங்கள் வழியை விட்டு விலக வேண்டும் என்று நான் ஆலோசனை கூறுவதில்லை. பவுல், "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று எழுதினார் (ரோமர் 12:18).[31] பிறருடன் நட்புறவாயிருக்க நீங்கள் மிகச் சிறந்த வகையில் முயற்சி செய்திருந்தும்கூட, உங்கள் குடும்பம் இன்னமும் உங்களைக் கைவிட்டிருந்தால், கர்த்தர் உங்களைக் கைவிடமாட்டார் என்று அறிவதில் ஆறுதல் அடையுங்கள் என்று நான் கூறுகின்றேன் (எபி. 13:5). அவரது வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள்:*

> *அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மாற். 10:29, 30).*

## *முடிவுரை*

*உங்கள் இரண்டு குடும்பங்கள் ஒன்றின் மீதொன்று கவிந்து இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். விஷயம் இதுவாக இல்லையென்றால், நீங்கள் நேசிக்கின்றவர்களை தேவனுடைய குடும்பமான சபைக்குள் கொண்டுவர உங்கள் சக்திக்கு உட்பட்ட ஒவ்வொன்றையும் செய்யுங்கள் என்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த முடிவை நிறைவேற்ற முயற்சி செய்வதைக் காட்டிலும் வேறு மாபெரும் முயற்சி எதுவும் இருப்பதில்லை. நீங்கள் இதில் வெற்றி பெறாவிட்டாலும், உங்களால் முடிந்ததை நீங்கள் செய்தீர்கள் என்று அறிவதில் நீங்கள் ஆறுதல் அடைவீர்கள்.*

*இதை நிறைவேற்றுவதில் நம்பிக்கை எதையாவது கொண்டிருப்பதற்கு, முதலில் நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் விசுவாசம் நிறைந்த உறுப்பினராக இருக்க வேண்டும். நீங்கள் "பின்பற்றுபவர்" என்பதில் இருந்து "குடும்பத்தவர்" என்ற நிலைக்கு நகர்ந்துள்ளீர்களா? நீங்கள் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக "மறுபடியும்" பிறந்துள்ளீர்களா? நீங்கள் உங்கள் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்துள்ளீர்களா? இயேசுவுடனான நமது உறவுமுறையை நாம் தீவிரமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புவதை, நாம் படித்துள்ள வரலாறு தெளிவாக்குகிறது. இதில் நாங்கள் உங்களுக்குக் உதவக்கூடும் என்றால், எங்களுக்கு அறிவியுங்கள் ... .*

### குறிப்புகள்

[1]*"ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தின் அறிமுகப் பகுதியில் காணவும்.* [2]*யோவான் 7ன் வசனங்கள் 3ம் 4ம் வசனம் 5ன் வெளிச்சத்தில் கண்ணோக்கப்பட வேண்டும்.* [3]*இதே போன்றதொரு குற்றச்சாட்டைக் கிறிஸ்துவின் விரோதிகள் ஒரு வேளையில் ஏற்படுத்தினார்கள் (யோவா. 10:20). கிறிஸ்து இவ்விதமாக நடத்தப் படும் தேவனுடைய முதல் அல்லது கடைசி ஊழியக்காரர் அல்ல (2 இரா. 9:11; அப். 26:24, 25 ஆகிய வசனங்களைக் காணவும்).* [4]*உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் "அது ஒரு கடைசி வைக்கோலாக மட்டுமே இருந்தது" என்று கூறுவது உண்டு.* [5]William Barclay, *The Gospel of Mark*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 76-77. *இதைத் தொடர்ந்து வரும் பத்திகள், பார்க்ளேயின் கருத்துக்கள்மீதான எனது தொகுப்புரையாக உள்ளன.* [6]*அமெரிக்காவில் நான், ''சிவந்த கழுத்துக்களும், தாழ்ந்த வாழ்வும் மற்றும் மனக்குறைவும் [உடையவர்]" என்று கூறுவதுண்டு.* [7]James Burton Coffman, *Commentary on Mark* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1975), 63. [8]*மரியாளுக்கு இனத்தாளின் மகன் (எலிசபெத்தின் மகனான யோவான் ஸ்நானன்) ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தார், அவரது மரணம் நிச்சயமாக வரக்கூடியதாகத் தோன்றிற்று. எந்தத் தாய்தான் இதைக் குறித்துக் கவலைப்படாது இருப்பாள்?* [9]*இவ்வசனத்தை மாற்கு 2:1, 2உடன் ஒப்பிடவும்.* [10]*மாற்கு சுவிசேஷ விவரத்தில், "அவர்கள் அவரிடத்தில் ... கூறினார்கள்" என்றுள்ளது.*

[11]Charles R. Erdman, *The Gospel of Mark* (Philadelphia: Westminster Press, 1967), 74. [12]*இந்தப் பிரசங்கமானது, இதற்கு முந்திய பாடத்திற்குப் பின்பு பிரசங்கிக்கப் பட்டதென்றால், நீங்கள், "நான் மறுபடியும் இதை வலியுறுத்த விரும்புகின்றேன்" என்று கூற விழையலாம்.* [13]William Arnot, *Lesser Parables of Our Lord* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1884), 115. [14]*அந்தப் பட்டியலில் இயேசு "தந்தை"யை உள்ளடக்கவில்லை. ஏனெனில் அந்தப் பணிப்பொறுப்பானது தேவன் ஒருவருக்கு மட்டுமே உரித்தானதாக இருந்தது (மத். 23:9).* [15]*ஏதாவதொரு காலகட்டத்தில் சபையின் உறுப்பினர்களாயிருந்துள்ளவர்கள், மற்ற கிறிஸ்தவர்கள் சகோதரர்களாக, சகோதரிகளாக மற்றும் தங்களுக்குத் தாய்மார்களைப் போலவும் கூட இருந்ததை அறியும் சிலாக்கியத்தைப் பெற்றிருப் பார்கள் (1 தீமோ. 5:1, 2).* [16]*இயேசு மாத்திரமே நாம் தேவனை அறியக்கூடிய வழியாக உள்ளார் என்பதை நீங்கள் வலியுறுத்த விரும்பலாம் (மத். 11:27). ஆகையால், தேவனுடைய சித்தத்தைக் கேள்விப்பட்டு அதின்படி செய்வதற்கு நாம் கிறிஸ்து போதித்தவற்றைக் கேட்டு அதின்படி செய்ய வேண்டும்.* [17]This sentence was adapted from R. C. H. Lenski, *The Interpretation of St. Luke's Gospel* (Minneapolis: Augsburg Publishing House, 1946), 461. [18]This phrasing is borrowed from Galatians 5:2; KJV. For similar usage in the KJV, see Mark 8:36; Hebrews 4:2; James 2:14, 16. [19]*எபேசியர் 3:15, தேவனுடைய குடும்பத்தைக் குறிக்கும் இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. எபேசியர் 3:14, 15ஐ* NIV *வேதாகமமானது,* "For this reason I kneel before the Father, from whom his whole family in heaven and on earth derives it name" *என்று தரவழைத்துள்ளது.* [20]*இயேசு நம்மையும் "சகோதரர்கள்" என்று அழைக்கின்றார் (எபி. 2:11).*

[21]KJV*யில் அப். 2:47ல் "சபை" என்ற வார்த்தை உள்ளது, ஆனால்* NASB*யில் இவ்வார்த்தையில்லை. ராஜ்யம்/சபை (மத். 16:18, 19) அப். 2ல் நிலைநாட்டப் பட்டதால் (அப். 1:6-9; 2:1-4ஐக் காணவும்), வசனம் 47ல் "அவர்களுடன்" என்று குறிப்பிடப்படும் மக்கள் அந்த ராஜ்யத்தின் குடிமக்களாக, சபையின் உறுப்பினர் களாக இருந்தார்கள் என்று நாம் அறிகின்றோம்.* [22]*அதாவது, இரண்டாவதானது பரலோகம் செல்வதற்கு இன்றியமையாத தாகவும் உங்கள் வாழ்விற்கான தேவனு*

*டைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாததாகவும் உள்ளது.* [23]William Barclay, *The Gospel of Mark,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 82-83. [24]*லூக்கா 9:59-62 வசனப்பகுதியானது, ஒருவரின் குடும்பத்தின்மீதான பற்றுறுதி குறித்த சரியற்ற முன்னுரிமைகளின் விவரிப்பாகப் பயன்படுத்தப்படலாம்.* [25]Gordon Powell, *Difficult Sayings of Jesus* (N.p.: Fleming H. Revell Co., 1962), 21. [26]*இந்தக் கூற்றுக்கு விவரிப்பு/பெருக்கப்படுத்துதல் தேவைப்பட்டது என்றால், நீங்கள் சில விவரிப்புகளை முயற்சி செய்து பார்க்கலாம்: "நான் ஒரு பையனாக இருந்தபோது, நான் ஓடமுடியும் என்று நினைத்தேன் - ஆனால் கடைசியில் நான் உலகத்தரம் வாய்ந்த ஓட்ட நிபுணரைக் கண்டபோது, என்னால் ஓடவே முடியாது என்பது போன்றே தோன்றிற்று." "கல்லூரியில் எனது முதல் சில ஆண்டுகளில், நான் எனது பெரும்பான்மையான துணிகளை ஒரு தொட்டியில் துவைத்தேன். நான் எனது வெள்ளை உடைகளை - நிஜமாகவே ஒரு வெள்ளைப் பின்னணியில் காணும் வரையிலும் - வெள்ளையாக இருந்தன என்றே நினைத்தேன். பின்புதான் அவைகள் வெள்ளையே அல்ல என்பதை உணர்ந்தேன்."* [27]*ஆயினும் சிலவேளைகளில், குடும்பத்தின் பிற உறுப்பினர்களின் பகைமை உணர்வின் நிமித்தமாக உறவுகள் சிதைவுபடத் தொடங்குகின்றன. இது இப்பிரசங்கத்தின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.* [28]William Hendriksen, *New Testament Commentary: The Gospel of Luke* (Grand Rapids, Mich.: Baker Book House, 1978), 437. [29]*ஓ மற்றும் பொ என்பது ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு என்பதாக உள்ளது. ஒரு கும்பலானது இயேசுவை மலையிலிருந்து தள்ளிவிடுவதை அவர் இயேசு தடுத்திருக்க முடியுமென்றால் (லூக். 4:28-30), அவர் தாம் விரும்பாத இடத்திற்குத் தம்மை இழுத்துச் செல்லுவதிலிருந்து தமது நான்கு சகோதரர்களைத் தடுக்கவும் முடியுமே.* [30]This scene is described in David Roper, "The Night I Went to Heaven" (tract) (Broken Arrow, Okla.: Christian Communications, n.d.), 11-12.

[31]*ஒரு பெண் கிறிஸ்தவராயிருந்து, அவளது கணவர் கிறிஸ்தவராயிராதபோது, அடிக்கடி முரண்பாடு எழுகிறது. இந்தச் சூழ்நிலையைக் கிறிஸ்தவ மனைவியர்கள் கையாள வேண்டிய விதம் குறித்துப் பேதுரு, 1 பேதுரு 3:1-6ல் கூறினார்.*